**யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரி- 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரியின் (“கல்லூரி”) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கல்லூரியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை

கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

---------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கல்லூரியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் ஆண்டுதோறும் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 31,034,308 கிரயமுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தாலும் இன்னும் மீளாய்வு ஆண்டின் இறுதிவரை பாவனையில் உள்ளது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை சரி செய்ய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களது அபிப்பிராயத்தின்படி, நாங்கள் அதை ஏற்றுக்கொள்வதுடன் இது தொடர்பாக எமது தலைமை நிறுவனத்தின் கொள்கையினை நாடி அதன் பிரகாரம் தகுந்த நடவடிக்கை எடுக்கின்றோம். | பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வு ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய நான்கு ஆண்டுகளுக்கும் தற்காலிக உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1,679,755 தொகையான பணிக்கொடை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மீளாய்வு ஆண்டின் இறுதியில் உள்ளவாறான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 1,679,755 இனால் கூட்டிக்காட்டப்பட்டிருந்ததோடு மீளாய்வு ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 262,353 இனால் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு மட்டும் கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருத்தமான சட்டங்களுடன் இணங்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டியவைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட மீளளிக்கத்தக்க நூலக வைப்புகள் ரூபா 68,000 தொகை 1 வருடம் தொடக்கம் 2 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு தீர்க்கப்படாமல் இருந்ததோடு அவற்றை தீர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாது நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | உங்களது அவதானிப்பை ஏற்றுக்கொள்வதுடன் உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றோம். | தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 246,175 தொகையான காசோலைகள் 1 வருடம் தொடக்கம் 5 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு தீர்வையாகாமல் இருப்பதோடு அவற்றை தீர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பெற்ற வருமானக் கணக்கிற்கு எடுத்து இந்த பிழையை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு எதிர்காலத்தில் இவ்வாறான பிழைகள் ஏற்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

--------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | **2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம்** - பிரிவு 40(1) | கல்லூரியின் ஆளுகை சபை 2014 ஆம் ஆண்டில் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஓர் உள்ளக கணக்காய்வாளரை நியமிக்கவில்லை. | நாங்கள் உள்ளக கணக்காய்வாளர் ஆளணியினை அமைச்சினூடாக முகாமைத்துவ சேவை திணைக்களமிடமிருந்து கோரியிருந்தோம். ஆனால் இதுவரை எமக்கு அனுமதி கிடைக்கப் பெறவில்லை. ஆகவே அனுமதிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் ஆளணி கிடைக்கும் வரை எமது உத்தியோகத்தர்களிலிருந்து ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். | தொடர்புடைய சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி** | | | |
| | (i) நிதி ஒழுங்கு விதி 396 | ரூபா 125,296 பெறுமதிமிக்க 7 காசோலைகள் ஆறு மாதங்களுக்கு மேலாக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாது | வருங்காலத்தில் இதற்காக அதிக கவனம் செலுத்தப்படும் என்பதோடு உரிய நேரத்தில் | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டடிருந்தது. இருப்பினும் நிதி ஒழுங்கு விதிகளின் படி முகாமையினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாற்றங்கள் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ii)நிதி ஒழுங்கு விதி 507 | 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டது. இருப்பினும், கொவிட் 19 நிலைமை காரணமாக, அதை பூர்த்தி செய்ய முடியவில்லை. இது தொடர்பாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதோடு வேலைகள் செயற்பாட்டில் உள்ளது. | நிதி ஒழுங்கு விதிகளுடன் இணங்க வேண்டும். |

**(இ) சுற்றறிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) 02 யூன் 2003 திகதிய பிஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| - அத்தியாயம் 4.2.6 | மீளாய்வு ஆண்டிற்கான கல்லூரியின் செயலாற்றல் அறிக்கை முகாமைத்துவ சபையினால் பகுப்பாய்வு ரீதியாக மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதோடு காலாண்டு முடிவடைந்த பின்னர் 30 நாட்களுக்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொது திறைசேரிக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிஓஎம் இனால் பகுப்பாய்வு செய்யவும் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொது திறைசேரிக்கு காலாண்டு முடிவடைந்த பின்னர் 30 நாட்களுக்கு முன்னர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| - அத்தியாயம் 9.2 | முகாமைத்துவ சேவைகள் திணைக்களமிடமிருந்து ஆளணிக்கு தேவையான அனுமதி பெறப்படாமல் உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர், உதவி நூலகர் பதவிகளுக்காக 3 | பதிவாளர், நிதியாளர், நூலகர் ஆளணிகளை முறையே உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர், உதவி | சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஊழியர்களை கல்லூரி ஆட்சேர்ப்பு செய்திருந்தது. இருப்பினும், கூட்டு மொத்தம் ரூபா 2,113,732 சம்பளங்கள் மற்றும் படிகளாக மீளாய்வு ஆண்டின் போது அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | நூலகராக மாற்றுவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பங்கள் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவர்களின் பதிலுக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். | |
| (ii) பல்கலைக்கழக கல்லூரிகளுக்கான செயற்பாட்டு கைநூல் | | | |
| - பிரிவு 2.4.1(எச்) | வணிக அலகின் தலைவர் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக ஓர் மாதாந்த முன்னேற்ற அறிக்கையினை தயாரிக்கவில்லை. | உங்களது பரிந்துரையினை நாங்கள் ஏற்பதோடு சபைக்கு சமர்ப்பிப்பதற்காக ஓர் மாதாந்த முன்னேற்ற அறிக்கையினை தயாரிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளோம். | பல்கலைக்கழக கல்லூரிகளுக்கான செயற்பாட்டு கைநூலுடன் இணங்க வேண்டும். |

**1.8 காசு முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒன்பது சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட ரூபா 142,402 தொகையான காசோலைகள் 3 தொடக்கம் 9 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு குறிப்பிட்ட பெறுநர்களுக்கு கையளிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படாது கையில் வைத்திருக்கப்பட்டன. | காசோலைகள் எழுதப்பட்டு அவர்களுக்கு வழங்குவதற்காக அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவர்களினால் சரியான நேரத்தில் பெறப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான ஒரு நிலைமை ஏற்படாது என்பதுடன் சரியான நேரத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஓர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் கல்லூரியின் செயற்பாட்டு விளைவு ரூபா 3,577,994 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 228,417 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 3,349,577 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டுக்கான செலவீனங்கள் குறைவடைந்தமை முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 4 வருட காலத்தில் கல்விகற்ற 921 மாணவர்களில் 69 மாணவர்கள் 7 தொடக்கம் 11 சதவீதம் வரையில் தொடர்பான கற்கை நெறிகளை பூர்த்தி செய்யாமல் விட்டு விலகியிருந்தனர். | விட்டு விலகலானது தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு நாடளாவிய ரீதியில் பொதுவான பிரச்சினையாக உள்ளது. இதை குறைப்பதற்கு நாங்கள் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். | விட்டு விலகலினை முகாமை செய்ய ஓர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்ட ரூபா 43,956 பெறுமதி கொண்ட ரீ-சேட்டுக்கள் இருப்பானது மாணவர்களுக்கு விநியோகிக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாமல் கடந்த 5 வருட காலமாக கல்லூரியின் களஞ்சியத்தில் விளைவற்றதாக வைக்கப்பட்டிருந்தது, அத்துடன் அந்த இருப்பின் பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை | அவற்றை விநியோகிக்க ஓர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 வாகனத் தொகுதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | குத்தகைக்கு பெறப்பட்ட இரண்டு கல்லூரியின் வாகனங்கள் 2020 ஜனவரி தொடக்கம் யூன் வரையான காலப்பகுதியில் எரிபொருள் நுகர்வுக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் அனுமதி மற்றும் பயணத்திற்கான சாரதிகளின் கையொப்பங்கள் இன்றி அண்ணளவாக 7,037 கிலோ மீற்றர்கள் பயணஞ்செய்துள்ளன. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படுவதை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | வாகனங்களின் கட்டுப்பாட்டிற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2014 ஆம் ஆண்டில் கல்லூரி ஓர் | உங்களது அவதானிப்பை | அவற்றை பதிவு |

| | | |
|---|---|---|
| நான்கு சக்கர உழவு இயந்திரம் மற்றும் ஓர் இரண்டு சக்கர உழவு இயந்திரம் என்பவற்றை கற்பித்தல் உபகரணங்களாக கொள்வனவு செய்திருந்தது, அத்துடன் எவ்வாறாயினும் அவற்றை மோட்டார் வாகன பதிவாளரிடம் பதிவு செய்வதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாங்கள் ஏற்றுக் கொள்வதோடு அவற்றை கூடிய விரைவில் பதிவு செய்ய தேவையான நடவடிக்கை எடுக்கின்றோம். | செய்ய தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமா்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 02 யூன் 2003 திகதிய பிஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 தொடக்கம் 2019 வரையான ஆண்டுகளுக்கான கல்லூரியின் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கைகள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபையில் சமா்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அவ் அறிக்கைகளின் சிங்களத்திற்கான மொழி பெயர்ப்பு செயற்பாட்டில் உள்ளது. | ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓர் கணக்காய்வு குழு கல்லூரியினால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களது பரிந்துரையை நாங்கள் ஏற்றுக் கொள்வதோடு எமது அமைச்சு மற்றும் யுனிவோரெக் இடம் ஓர் அங்கத்தவரை முன்மொழிய கேட்டிருந்தோம். எமது தலைமை நிறுவனத்தினால் ஒரு அங்கத்தவர் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளார். நாங்கள் ஓர் கணக்காய்வு குழுவை ஸ்தாபிக்க உடனடி நடவடிக்கை எடுப்போம். | ஓர் கணக்காய்வு குழுவை ஸ்தாபிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 14 தொடக்கம் 100 சதவீதம் வரையான கணிசமான வேறுபாடுகள் பாதீட்டிற்கும் உண்மையான செலவுகளுக்கும் இடையில் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், இது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் விளைதிறனான ஓர் கருவியாக பாதீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது. | திறைசேரி திணைக்களத்தினால் எங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகையான அரச நிதிகளை நாங்கள் வீணடிக்கவில்லை. பாதீட்டுக்கு அப்பால் செலவுகள் இல்லாமையால் எங்களால் சேமிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பாதீட்டு மதிப்பீடுகளானது முறையாக தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு பொது நிறுவனமும் ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான 2030 நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க செயற்பட வேண்டும் என்பதுடன் 2017 ஒக்டோபர் 03 திகதிய 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் அனைத்து பொது நிறுவனங்களும் மேற்கூறிய விடயத்தை சுற்றறிக்கைகள் மூலம் அறிந்திருந்தன. ஆயினும், கல்லூரி நோக்கங்கள் மற்றும் அதனது செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட இலக்குகளையும் மற்றும் அவ் இலக்குகளின் அடைதலை அளவீடு செய்வதற்கு தேவையான சுட்டிகளையும் அடையாளம் காணவில்லை. | 03 ஒக்டோபர் 2017 திகதிய 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்ட சுற்றறிக்கையை பயன்படுத்தி ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் குறித்த விழிப்புணர்வை ஊழியர்களிடையே ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடையப்பட வேண்டும். |